# பெண்கள் செய்தி மடல்

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**

**மடல் - 20 : 1** **2018**



- ✦ சர்வதேச பெண்கள் தினம்
- ✦ அமைதிக்கான நடை
- ✦ துயரமற்ற, கண்ணீரற்ற ஒரு நிலையை
- ✦ நீதி கோரும் சகோதரிகளாக நாம் ஒன்றிணைவோம்
- ✦ மாற்றுத் திறனாளிகள் என்று அழைப்பதால் மட்டும்
- ✦ நூறு கோடி மக்களின் எழுச்சிக்காய்
- ✦ மட்டக்களப்பு மாவட்டத்தில் 2018 உள்ளூராட்சி சபை



"..............................

எனினும் – நாம் வாழ்ந்தது
உண்மையே. ஆதலினால் –
பெண்களின் திசைவழிப் பயணம்
மீண்டும் மீண்டும் உயிர்தெழும்
மறுவழவங்கள் கொள்ளும்"


# சர்வதேச பெண்கள் தினம் - 2018




அரைக்க அரைக்க
அசையாமல் கிடக்கும்
அம்மி மிதித்து
களைத்தாலும்
அலுத்தாலும் அசையாது
தொடரும் அருந்ததி
பார்த்து வேரற்ற
வாழையில்
பொருத்தமற்று இளநீர்க்
குலை சுமக்கும்
சடங்குகளின் அர்த்தங்கள்
கேட்காமல் இழுப்பதே
சம்பிரமாய சட்டமாகுமா?





பெண்களது வல்லமைகள் அளப் பெரிது. எனினும் அடங்கி வாழ்தலும், அடக்கப்படுதலும், அவஸ்தையை மறைத்தலும் பெண்களின் அழகு என்று எழுதிச்சென்ற வரலாற்று வ(ந)ரிகளின் ம(த)ந்திர வலையில் சிக்கி, இன்று உண்மையான வலிமையை எமது கையாலேயே



மிகவும் சிரமப்பட்டு நலியச் செய்து வருகின்றோம். இதுவே பெண்களின் தொடர் கதையாகும். ஆகவே இவ்வருட பெண்கள் தினத்தின் முக்கிய அம்சமாக எமது உடல் உள வலிமையை முன்நிலைப்படுத்தும் நிகழ்வுகள் நடைபெற்றன.

ஆகவே எமது ஆளுமை, ஆரோக்கியம், பாதுகாப்பை மேம்படுத்தும் பொருட்டு யோகா, மற்றும் தற்காப்புக் கலைகள், இவற்றுக்கான பயிற்சிகள் இடம்பெற்றன. முக்கியமாக எமது பெண்கள் குழுக்களில் இருந்து இப் பயிற்சிகளைப் பயின்ற பெண்கள், தமது பயிற்றுனருடன் இணைந்து பயிற்சியாளராகச் செயற்பட்டது சிறப்பம்சமாகும்.



இது தமது உரிமை என்பதை பெண்கள் உணர்வது முதல் வெற்றியாகும். தமது உரிமையை பெண்கள் உணர்ந்து கொள்ளும் சூழல் இல்லாது இருத்தல் அவர்களுக்கான சவாலாகும்.

என்றோ நடந்த பெண்கள் போராட்டத்தை கொண்டாடுவது நிகழ்வாகும். இன்று கண்முன்னே தெரியும் பெண் தொழிலாளர் உரிமையை மதித்தலும் காது கொடுத்தலுமே உண்மை வாழ்வாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “அமைதிக்கான நடை”



யுத்தத்தின் பின் அடிக்கடி நாட்டு மக்களின் மனங்களில் எதுவும் எப்போதும் நடக்கலாம் எனும் தோற்றப்பாடு நிலவுகின்றது. இந்தத் தோற்றப்பாடே அடிக்கடி மக்கள் மனங்களிலும் இனங்கள் இடையேயும் ஒரு முறுகல் நிலையை இலகுவாக தோற்றுவிக்கின்றது. அந்த அடிப்படையில் அண்மையில் சாப்பாடு விடயமாக மக்கள் இடையே பரவலாக ஒரு வதந்தி பரவத் தொடங்கியது. இது ஒரு கவலைக்கிடமான விடயமாகும். ஏனெனில் காலம் காலமாக ஒற்றுமையை உருவாக்கிய விடயங்களில் ஒன்றாக இருந்து வந்தது மக்களது உணவுப் பரிமாற்றமாகும். ஒவ்வொரு இனத்திற்கும் தனித்துவமான உணவுகள் இருக்கும். விசேட நாட்களில் சகோதர இனங்களிடையே அவை



பகிரப்படும். அதுவே அந்தந்த இனங்களிடையே அந்த திருநாட்களின், பெருநாட்களின் சிறப்பம்சமாகும்.

இது இவ்வாறிருக்க நாம் வாழும் சூழலில் பல வித வன்முறைகள் தொடர்ந்து நடந்து கொண்டுள்ளன. அதற்கெதிராக அனைவரும் தொடர்ந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். எனினும் வன்முறை ஒன்று ஏற்படுகையில் இன்று முதலில் கேட்கப்படுவது “பாதிக்கப்பட்டது எந்த இனத்தைச் சேர்ந்த நபர்” என்றும் “பாதிப்பை ஏற்படுத்தியவர் எந்த இனத்தைச் சேர்ந்தவர்” என்பதுமே. இவ் வன்முறைச் சம்பவமானது இரு இனங்களுக்கிடையே நடைபெற்று இருக்குமாயின் பாதிக்கப்பட்டவரையோ அல்லது அந்த வன்முறை மீண்டும் நிகழாது தடுப்பதையோ அல்லது அவ் வன்முறைக்கான நீதியை தேடுவதையோ கவனத்தில் கொள்வது இரண்டாம் பட்சமாக்கப்பட முதலில் தூண்டப்படுவது இனப்பாகுபாடும் அதனூடான இன முறுகலும் ஆகும். இச் சந்தர்ப்பங்களில் ஏற்படும் கதவடைப்புக்கள், ஊரடங்குச் சட்டங்கள் மக்களை பெரிதும் அசௌகரியத்திற்கு உட்படுத்துகிறது. நோயாளிகள், தினசரித் தொழிலாளிகள், குழந்தைகள், என பலர் ஏன் தமக்கு தமது அடிப்படைத் தேவையை நிறைவு




செய்து கொள்ள முடியாமல் இச் சூழல் உள்ளது என்பது புரியாமலேயே பாதிக்கப்படுகின்றனர்.

வன்முறை என்பது யார் செய்தாலும் எந்த வர்க்கத்தினரால் நடத்தப்பட்டாலும் அது வன்முறையே. அதைத் தடுப்பதாயின் எம்மிடையே புரிந்துணர்வு ஏற்பட வேண்டும். கதவடைப்புக்களும், கட்டுக் கதைகளும், அர்த்தமற்ற பயங்களும், அதனால் ஏற்படும் இருண்ட மௌனங்களும் மேலும் மேலும் பிளவுகளையே ஏற்படுத்தும். இவ்வாறான ஒரு நிசப்த நேரத்தில் எங்களால் நடத்தப்பட்டது அமைதிக்கான ஊர்வலம். எமக்கு வேண்டியதை, நாங்கள் தேடுவதை எடுத்துக்கொண்டு சர்வதேச பெண்கள் தினத்தன்று பெண்கள் நாம் ஒருவர் பின் ஒருவராக எமது செய்தியை நாம் வாழும் சூழலுக்கு எடுத்துச் சொன்னோம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரமற்ற, கண்ணீரற்ற ஒரு நிலையை உருவாக்குவோம்!
## 2018 மார்ச் 8 சர்வதேச பெண்கள் தினம்
## கிழக்கு மாகாணம்

நாம் சர்வதேச பெண்கள் தினத்தை இம்முறை கனத்த இதயத்துடன் எதிர்கொள்கின்றோம். எமது பல போராட்டங்களுக்கு மத்தியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயங்களை ஆராய்வதற்கான அலுவலகத்தை அமைப்பதற்காக நாம் போராடினோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 25% பெண்களுக்கான ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்னும் விடயத்திற்காகவும் போராடினோம், இது குறித்த ஒதுக்கீடு மற்றும் நம்பிக்கை தொடர்பான போராட்டமான சூழ்நிலை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கும் இத்தருணத்தில் எமது நாட்டில் ஆங்காங்கே இனவாத வன்முறை நிலையொன்று மீண்டும் கிளர்ந்தெழும்ப ஆரம்பித்திருக்கின்றது.

28 வருடங்களாக இருந்த அவசரகால நிலைமையை முடிவுக்குக் கொண்டுவரும் விதத்தில் 2011 ம் ஆண்டில் இது நீக்கப்பட்டது. அதன்பின்னர் இப்போது மீண்டும் நாடுமுழுவதிலும் அமுலுக்குவரும் விதத்திலான அவசரகால நிலைமையானது 2018 மார்ச் 6ம் திகதி மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

2017 நவம்பர் 30 ம் திகதியன்று கிழக்கு மாகாணத்தின் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரிடையே ஒரு பதட்டமான நிலைமை உருவெடுத்தது. அத்துடன் இதுதொடர்பாக இணையத்தின் ஊடாக வெறுப்பூட்டும் பாலியல் ரீதியிலான உரைகளும் இடம்பெற்றிருந்தன. மட்டக்களப்பு மாவட்டத்தின் பெண்கள் என்ற ரீதியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் இனரீதியான வன்முறையைக் கண்டித்து ஒரு வலுவான பொது அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தோம். மற்றும் பதட்டமான நிலைமை, இடங்களில் நாம் கைகோர்த்து வன்முறை மற்றும் வெறுப்பூட்டும் உரையை முடிவுக்குக் கொண்டுவரும்படி வலியுறுத்தினோம்.

ஒரு சில மாதங்களின் பின்பதாக, இப்போது மார்ச் 2018 ல் இன ரீதியான பதட்டநிலையானது காட்டுத்தீ போன்று பரவிக் கொண்டிருக்கின்றது.

அம்பாறைப் பிரதேசத்தில், பெப்ரவரி 26, 27ம் திகதி நான்கு கடைகள் மற்றும் ஒரு வணக்கஸ்தலம் உட்பட பல சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்ட அதேவேளை குறைந்த பட்சம் மூன்று நபர்கள் இதன்போது காயமுற்றனர். உணவகம் ஒன்றில் வழங்கப்பட்ட உணவில் இனவிருத்தியைத் தடைசெய்யும் மாத்திரை கலக்கப்பட்டிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டமையே இந்த வன்முறை நிலைமை இப்பிரதேசத்தில் வெடிப்பதற்குக் காரணமாக அமைந்தது.

2018 பெப்ரவரி 22ம் திதியன்று தெல்தெனிய பிரதேசத்தின் இளைஞர். குழுவொன்றினால் மரணத்திற்கு உள்ளாகும் அளவிற்கு தாக்கப்பட்டு, காயங்களுடன் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் 4 சந்தேக நபர்கள் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு மார்ச் 7ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். போக்குவரத்து தொடர்பிலான ஒரு சம்பவத்தின்போது ஏற்பட்ட முரண்பாட்டின் விளைவாகவே இந்த வன்முறை நிலைமை உருவாகியுள்ளது என பரவலாக நம்பப்படுகின்றது.

இன மற்றும் மத ரீதியான பல்வகைமையின் அடையாளத்தைக் கொண்டுள்ள பெண்களாகிய நாங்கள், இந்த நாட்டினது பிரஜைகளின் ஜனநாயக உரிமைகளுக்குப் பங்கம் விளைவிக்கும் இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் தொடரக்கூடாது என்கின்ற விடயம் தொடர்பாக அரசு மற்றும் எதிர்க் கட்சிகள் உடனடியாக மற்றும் பொறுப்பு வாய்ந்த விதத்தில் பதிலளிக்க வேண்டுமென வலியுறுத்தி நிற்கின்றோம்.

இவ்வாறாக ஏற்பட்டுள்ள முறிவுகளை அன்பு மற்றும் நம்பிக்கை ஆகிய பண்புகள் கொண்டு சீர்படுத்துவதற்கு எம் சகோதர, சகோதரிகளுக்கு நாம் இத்தால் அழைப்பு விடுக்கின்றோம்.

ஒருமைப்பாடு மற்றும் உதவிசெய்தல் போன்ற விடயங்களுக்கான பொதுவான அடையாளச் செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கும், நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

இம்முறை சர்வதேச மகளிர் தினத்தில் வன்முறையற்ற, துயரமற்ற, கண்ணீரற்ற ஒரு நிலை உருவாவதே எமது எதிர்பார்ப்பாகும்.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் - மட்டக்களப்பு

- அனர்த்த முகாமைத்துவப் பெண்கள் கூட்டமைப்பு (13 பெண்கள் நிறுவனத்தையும் 15 தனி நபர்களையும் கொண்ட வலையமைப்பு) – கிழக்கு மாகாணம்
- தமிழ், முஸ்லிம், சிங்கள சகோதரிகள் குழு – கிழக்கு மாகாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செங்கொடி பெண்கள் இயக்கம் - வீட்டு வேலைத்தொழிலாளர் சங்கம் - கிழக்கு, மத்திய மாகாணம்
- பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு (8 பெண்கள் நிறுவனங்களைக் கொண்ட வலையமைப்பு) – கிழக்கு, வடமேற்கு, வடக்கு மாகாணங்கள்

07.02.2018

(பெண்கள் அமைப்புக்கள் இணைந்து வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் இருந்து பல முக்கிய பகுதிகள் மேலே தரப்பட்டுள்ளன.)




# நீதி கோரும் சகோதரிகளாக நாம் ஒன்றிணைவோம்

## வன்முறைகளற்ற வீடு, சமூகம், நாடு எமக்கு வேண்டும்.

நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டு வரும் பெண்கள், சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகள் ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளதை நாம் வலியுறுத்துகின்றோம். சமகாலத்தில் சில முக்கிய பாலியல் வன்முறைச் சம்பவங்களுக்கு சட்ட நீதி கிடைத்ததையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். இருப்பினும் பெண்கள் உரிமைச் செயற்பாட்டாளர்களாகிய நாங்கள், குறித்த சில சம்பவங்களுக்கு மட்டுமல்லாது அனைத்து வன் முறைகளுக்குமான சட்ட நீதி கோரியும் பாலியல் வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வர சமூக நீதி கோரியும் நிற்கின்றோம்.

### காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த உண்மை, நீதி, சமாதானம் எமக்கு வேண்டும்

நாடளாவிய ரீதியில் பல வருடங்களாக தொடர்ச்சியாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான உண்மையையும், நீதியையும் கோரி தொடர்ந்து போராடுகின்ற எமது சகோதரிகளுடன் இணைந்து நாம் நீதி கோருகின்றோம். கடந்த காலங்களில் சட்டத்திற்கு முரணாக காணாமல் ஆக்கப்படுதல் குறித்து மறைக்கப்படும் உண்மைகளை அறியவும்,அம்மௌனத்தைக் கலைக்கவும் போராடும் சகோதரிகளுடன் நாம் திடமாய் உடன்நிற்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் அவரது உற்றார் உறவினருக்கு உண்மை அறியும் உரிமை, நீதி, சமாதானம் கிடைக்கும் வரை எமது சகோதரிகளுடன் கைகோர்த்து நிற்போம்.

### இனங்கள் இணைந்து இன்பமாய் வாழும் சமூகம் எமக்கு வேண்டும்

நாடளாவிய ரீதியில் சமகாலத்தில் இனங்களுக்கிடையே தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற வன்முறைகளை நாம் எப்போதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். இத்துடன் இனங்களுக்கிடையே வன்முறைகளைத் தூண்டும் வகையிலான வெறுக்கத்தக்க பேச்சுக்களையும் செயற்பாடுகளையும், வதந்திகளையும் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். அதே நேரம் வன்முறையைக் கையில் எடுத்தவர்களுக்கு மாறாக இன மத பேதங்களைக் கடந்து வன்முறைக்கு உட்படக்கூடிய நிலையிலிருந்த மக்களுக்கு ஆதரவு வழங்கி, அவர்களுக்காக குரல் கொடுக்கவும் துணிந்து நிற்பவர்களுடன் நாம் கைகோர்த்து நிற்கின்றோம்.

**மௌனத்தை இன்று நாம் கலைக்கின்றோம்! வன்முறைகளற்ற மகிழ்ச்சியான வாழ்வுக்கான நீதியை நோக்கிய பயணத்தில் அனைவரும் எங்களோடு இணையுங்கள்!!!!**

அனர்த்த முகாமைத்துவப் பெண்கள் கூட்டமைப்பு
(மட்டக்களப்பு பெண்கள் வலையமைப்பு)
இல.4/1 , தோமஸ் லேன், மட்டக்களப்பு
தொலைபேசி : 0652223297, 0652224657

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத் திறனாளிகள் என்று எங்களை அழைப்பதால் மட்டும் என்ன வந்துவிடப் போகிறது?




கண்ணில் சரியான வருத்தம். மருந்தெடுக்க ஆஸ்பத்திரிக்குப் போனன். வெள்ள படந்திருக்குது என்று சொன்னாங்க. அதனால வாட்டில நிக்கனும் என்று சொல்லி டிக்கட் போட்டாங்க. நானும் வாட்டில நிக்கிற ஆயத்தத்தோட போனன். மேலுக்கு வாட். லிவ்ரில (lift) போனன். அங்க என்னப்பாத்த டொக்டர் சொன்னார், நீங்க இங்க எப்படி சமாளிப்பீங்க "டொய்லட்" படி உயரமா ஏறிப்போகணும். ஆனா உங்க வீல் செயாரை அதுக்குள்ள ஏத்திற கஸ்டம். நீங்க "உங்க விருப்பத்தின் பேரில் வைத்திய ஆலோசனைக்கு எதிராக" போறதா எழுதி இந்த போமில சைன் பண்ணித்துப் போங்க என்றார். அவரைப் பொறுத்தவரை அவரால் அந்த நிமிடம் எனக்காக செய்யக்கூடிய மனிதாபிமான உதவி அதுவாகத்தான் இருந்திருக்கும்.

மற்றுமொரு சம்பவம் கடந்த வருடம் வந்தது. அது மாற்றுத் திறனாளிகள் தினம். எங்களது நலனை மேம்படுத்தும் நோக்குடன்...(?) , எங்களது திறனை உலகிற்கு எடுத்துக்காட்டுவதை பாரிய நோக்காகக் கொண்டு ...(?) ஒரு அரசசார்பற்ற அமைப்பால். நாங்கள் பெரியதொரு மைதானத்திற்கு கொண்டு செல்லப்பட்டோம். இதற்கான நிகழ்ச்சித் திட்டத்தை எழுதி அதற்கான நிதியுதவி பெற்ற அந் நிறுவனம் எங்களை ஏற்றி இறக்கும் ஏற்பாட்டையும் செய்திருந்தது. ஆனால் நாங்களும் மனிதர், எங்களுக்கும் திறமை இருப்பதுபோல், வாழ்வதற்கான உரிமை இருப்பதுபோல் சிறுநீர் கழிப்பதற்கான தேவை ஒன்றும் இருக்கும் என்பதை ஏனோ மறந்து விட்டார்கள். அங்கு சாதாரணமானவர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த மல சல கூடத்தை பாவிக்க முடியாதபடி, வயிறு முட்ட வலியுடன் இரு காலும் இழந்த நான் எனது சக்கர நாற்காலியை உள்ளே கொண்டு செல்ல முடியாதபடி எனினும் அம் மல சல கூடத்தை பாவித்து வருபவர்களை ஏக்கத்துடன் பார்த்தபடி அன்று பின்னேரம் முடியும் வரை நான் அனுபவித்த அவஸ்தை....நிச்சயமாக இனிமேல் "எங்களுக்காக" என்று மற்றவர்களால் ஏற்பாடு செய்யும் நிகழ்வுகளுக்கு செல்வதே இல்லை என்று அன்றே முடிவு செய்து விட்டேன்.


இன்று எத்தனையோ அலுவலகர்கள் எம்மை வந்து சந்திக்கிறார்கள். சில சில உதவிகள் அவர்கள் மூலம் கிடைக்கின்றது. எனினும் அவர்கள் எங்களை தம் மேசைக்கு அழைப்பதோ நாமும் எமது சக்கர நாற்காலியை படியேற்றமுடியாமல் கஸ்டப்படுவதோ இல்லை. அவர்கள் அலுவலகங்களின் வாசலுடன் மட்டுமே எமது சந்திப்பு முடிவடைகிறது. இது அவர்கள் மனிதாபிமானமாக இருக்கலாம்.. என்றாலும் அலுவலகம் மாற்றி அலுவலகம் செல்லும் அவர்கள் தமக்கான மல சல கூட வசதிகள், கதிரைகள் பற்றி யோசிப்பார்களே தவிர எந்த ஒரு அலுவலகத்தராவது எங்களைப் பற்றியோ, எங்களது சக்கர நாற்காலி பற்றியோ சிந்தித்திருப்பார்களா ..?

நாங்களும் மனித இனம். எனினும் எங்கள் அன்றாடக் கடன்களை முடிப்பதற்கான வசதிகள் அற்று சேவை வழங்கும் நிறுவனம் உள்ளதும், வைத்தியசாலையில் தங்கி நின்று சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியாதபடி வைத்திய சாலைகள் அமைந்திருப்பதும் எங்களது பாவமா? அல்லது சேவை வழங்கும் துறையின் அலட்சியமா?

**(மாற்றுத்திறனாளி பவானியுடனான சந்திப்பில் இருந்து.)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நூறு கோடி மக்களின் எழுச்சிக்காய் ......




14.02.2018 அன்று நூறு கோடி மக்களின் எழுச்சி தினத்தன்று பெண்களுக்கும் பூமித்தாய்க்கும் எதிரான வன்முறைகளற்ற வாழ்வைக் கொண்டாடுவோம்" எனும் தொனிப்பொருளில் வன்முறையற்ற வாழ்வுக்கான காண்பியக் கலைப்படைப்பாளர் -களினால் காண்பியக்கலைக் காட்சி சத்துருக்கொண்டான் திருமலை வீதியோரம் திறந்தவெளிக்காட்சியாக இடம் பெற்றது.

இந்தப் பூவலகில் மூன்றில் ஒரு பெண் தனது வாழ்க்கைக் காலத்தில் வன்முறைக்குட் படுத்தப்படுகிறாள். அப்படியாயின் உலகின் சனத்தொகையாகிய அறுநூறு கோடியில் பாதியாகிய முன்நூறு கோடி பெண்களில் நூறு கோடிப் பெண்கள், வன்முறைக்குட்படுத்தப்படுகிறார்கள். இது மிகவும் மோசமான நிலையாகும். பெண்களுக்கும் அனைத்து மனிதர்களுக்கும் இயற்கைக்கும் எதிரான வன்முறைகள் இல்லாத உலகம் கொண்டாடப்பட வேண்டியது.

**மனிதர் படைத்த உலகம் இயற்கை படைத்த உலகின் பின்னணியில்**



எங்களது உணவு பிளாஸ்டிக்கில் அடைக்கப்பட்டுள்ளது.
எங்களது தண்ணீர் பிளாஸ்டிக்கில் அடைக்கப்பட்டுள்ளது.


எங்களது மருந்துகள் பிளாஸ்டிக்கில் அடைக்கப்பட் -டுள்ளன. எங்களது அறிவு – புத்தகங்களும் தகவல்களும் பிளாஸ்டிக்கில் அடைக்கப்பட்டு-ள்ளன.

எமது காற்று பிளாஸ்டிக்கில் அடைக்கப்பட்டுள்ளது.
நாமும் அடைபட்டுள்ளளோம்.
எங்களுடன் வாழ்வதால், பூச்சிகளும், பறவைகளும், விலங்குகளும், தாவரங்களும், பஞ்ச பூதங்களும் பிளாஸ்டிக்கில் அடைக்கப்பட்டுள்ளன.

கமலா வாசுகி

மனிதர் தங்களுடைய அன்றாட தேவைகளுக்காக செய்கின்ற ஒவ்வொரு செயற்பாடுகளும் இயற்கைக்கும் தமக்குமான பாதிப்புக்களை எவ்வாறு தேடிக்கொள்கின்றனர் என்பதையும், அதன் விளைவான மனித அவலங்கள் மற்றும் இயற்கையின் பாதிப்புக்கள் போன்றவற்றையும், எடுத்துக் காட்டும் புகைப்படத் தொகுப்பின் ஒரு பகுதி

திசாந்தினி திருச்செல்வம்



ஆரம்ப காலத்தில் மனிதர்கள் சூழலுக்கு ஏற்றவாறு வாழ்ந்தனர். ஆயினும் தற்போது அப்போதிருந்த பன்பாய், பனையோலைப்பாய், சுருள் போன்ற மாசற்ற பொருட்பாவனைகள், பெரிதும் அருகி வருவதுடன் இயற்கையோடு ஒன்றிணைந்த பொருட்களைப் பயன்படுத்தாது மாற்றுதிறனான பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் சூழலை மாசுபடுத்துவதைக் கேள்விக்குள்ளாக்கும் காண்பியக் கலைக் காட்சி

ப. நிரஞ்சன்



இயற்கையை வன்முறை செய்வது மனிதர்கள் தம்மைத் தாமே வன்முறை செய்வது போன்றதாகும். இயற்கையின் சமநிலையைக் குழப்பும்படியான தேவைக்கதிகமான பாவனைகளால் நீர், நில, வாழ் உயிரினங்கள் அசாதாரண நிலைக்குள்ளாக்கப்படுகின்றன. ஒவ்வொரு மனிதரும் தம்மைப்போன்றே ஏனைய உயிரினங்களும் சிறப்பான உயிரினங்கள் என்பதனை உணர வேண்டும் என்பதற்காக மனித உருவிலான மரங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன.


யசோதாயினி சிறீதரன்



போதிய அறிவுப் புலமைகளும் அரச சட்டங்களும் இருக்கின்ற போதிலும் மீனவர்க-ளினதும், உரிய அதிகாரி -களினது கவனயீனம் காரணமாக அதீத வீழ்ச்சி காணும் மட்டக்களப்பு நகர புறநகர கிராமிய வாழ்வாதாரத்தை தீர்மானிக்கின்ற மீன் உற்பத்தியில், போதிய கவனக் குவிப்பைச் செலுத்தி, இயற்கையோடு இணைந்த முறையில் மீனினங்களைப் பாதுகாத்தல் தொடர்பான காண்பிய வெளிப்பாடு.

யோ. ஜகேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரம்பகால மீன்பிடி முறைகள் சூழலை ஒன்றிப்போகும் விதத்தில் பாதகமின்றிய முறைகளாகவே இருந்தன. ஆனால் இன்றைய நவீன தடை செய்யப்பட்ட இரசாயண தொழில் நுட்ப முறைகள் மீன் இனப்பெருக்கத்தைத் தடுப்பதுடன் மீன் இனங்களை அழித்தும் வருகின்றன. இவ் வன்முறையான மீன்பிடி முறைகளால் எதிர்கொள்ளும் அபாயம் எதிர்கால சந்ததியினர் எமது பிரதேசங்களில் இயற்கையான மீன்களை கண்களால் கூட காண்பார்களா என்ற அய்யப்பாட்டைத் தோற்றுவித்துள்ளது. துரித வளர்ச்சிக்கேற்ப நாமும் சூழலை வன்முறைக்குட்படுத்துவதா? அல்லது சூழலுடன் ஒன்றிப்போவதன் ஊடாக நீண்டகால நன்மையை அடைந்து கொள்வதா?

எம். டீ எப். றுக்ஸானா

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 2018 உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களுக்கும் ..........

தேர்தல் வாக்காளர்களில் அரைப்பங்கினரான பெண்களாகிய நாங்கள் கீழ்வரும் விடயங்களை தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு கோருகிறோம்......

- உள்ளூராட்சி மன்றங்களினூடாக நடைபெறுகின்ற அனைத்து நடவடிக்கைகளிலும், அமுல்படுத்தப்படும் திட்டங்களிலும் பெண்களின் 50% பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தல்
- உள்ளூராட்சி மன்றங்களினூடாக அமைக்கப்படும் சங்கங்கள், அமைப்புக்கள் அனைத்திலும் 50% பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தல்
- உள்ளூராட்சி மன்றங்களின் திட்டங்களுக்காக தயாரிக்கப்படும் பாதீடுகள் (வரவு செலவு திட்டங்கள்) பால்நிலை சமத்துவத்துடனான பாதீடாக அமைவதுடன் பெண்கள் மேம்பாடுகளுக்காக பாதீடுகள் ஒதுக்குதலை உறுதிப்படுத்தல்
- உள்ளூராட்சி மன்றங்களுக்கென பால்நிலை சமத்துவத்துடனான திட்டமிடல் ஒன்றினை உருவாக்குதல்
- உள்ளூராட்சி மன்ற அலுவலகங்களில் பெண்கள் மேம்பாடு தொடர்பான நடவடிக்கைகளுக்கான அலகு ஒன்றை உருவாக்குதல்
- உள்ளூராட்சி மன்றங்களின் அனைத்து தரவுகளும் ஆண் பெண் வகைப்படுத்தப்பட்ட புள்ளி விபரங்களாக இருப்பதை உறுதிப்படுத்தல்
- முறைசாரா தொழில்களில் ஈடுபடும் பெண்களுடன் கலந்துரையாடி இவர்களுக்கானதோர் ஆதரவுக் கட்டமைப்புக்களையும் இடங்களையும் உருவாக்குதல் ( உதாரணமாக: தொழில் புரியும் இடங்களில் மலசலகூட வசதி, கர்ப்பிணி பெண்களுக்கான சுகாதார மற்றும் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தல், பிள்ளைகள் பராமரிப்பு நிலையங்கள், பாலூட்டுமிட வசதி, பெண்களுக்கான சுகாதார துடைப்பான்களை (நப்கின்) அகற்றும் வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்தல்
- உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் வரும் அனைத்து பொது இடங்களிலும் பெண்கள் மீதான தொந்தரவுகளற்ற வகையில் மின்விளக்கு வசதிகளையும், பெண்கள் மீதான தொந்தரவுகளை முறையிடும், பதிலிறுப்பு செய்யும் பொறிமுறையையும், தொந்தரவுகளை இல்லாதொழிக்கும் வகையிலான பிரச்சார நடைவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- உள்ளூர் வளங்களை பயன்படுத்தி மேற்கொள்ளும் உற்பத்திகளுக்கான சந்தைவாய்ப்புக்களையும் அவற்றுக்கான இட ஒதுக்கீடுகளையும் மாவட்ட மட்டத்தில் ஏற்படுத்தல்
- உள்ளூராட்சி மன்றங்களினூடான சட்ட, பதிவுகள், அனுமதிகள் (கட்டிட அனுமதியின்போது, வியாபார பதிவுகள் மேற்கொள்ளும் போது, சமூக சேவை அமைப்புக்களைப் பதிவு செய்யும் போது) வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் பால்நிலை சார் பகுப்பாய்வு செய்யப்பட்டு, இவற்றின் மூலம் ஏற்படும் விளைவுகள் பற்றி பெண்களுடன் கலந்துரையாடுதலை உறுதிப்படுத்தல்
- உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் வரும் அனைத்து வீதிகளும், பொது இடங்களும், பொதுக் கட்டிடங்களும் விசேட தேவைக்குட்பட்டோர் சமமாகவும் இலகுவாகவும் அணுகக்கூடிய வகையிலும் அமைவதை உறுதிப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கழிவகற்றல் நடைமுறைகள் மற்றும் இடங்கள் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையில் அமைவதோடு, கழிவகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடும் மிகவும் ஓரங்கட்டப்பட்ட சமூகத்தையும், கழிவகற்றும் காணிகளுக்கருகில் வாழ்வோரின் உரிமைகளையும் உறுதிப்படுத்தல்
- உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் வரும் பாலர் பாடசாலைகளில் பால்நிலை சமத்துவக் கல்வி செயற்பாடுகளை பாடத்திட்டங்களில் உள்வாங்குதல்
- மட்டக்களப்பு மாவட்டத்தில் காலங்காலமாக இருந்த இயற்கைச்சூழல் கட்டமைப்பைப் பேணக் கூடிய கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் இயற்கைச் சூழல், வரலாற்றுப் பாரம்பரியங்களை பாதுகாக்கக் கூடிய திட்டங்களை வகுத்தல்

அனைத்து கட்சிகளும், சுயேற்சைக் குழுக்களும் இன, மத, பால் துவேசங்களைத் தூண்டாததவையாக தங்களது தேர்தல் விஞ்ஞாபனம் அமைவதை உறுதிப்படுத்தக் கோருவதோடு வெறுக்கத்தக்க பேச்சு மற்றும் தவறான மொழிப்பிரயோகங்களை முற்றாக தவிர்க்க வேண்டும் எனவும் நாம் கோருகிறோம்.


மேற்படி கோரிக்கைகள் நீண்ட காலமாக அரசியலில் பங்காளர்களாக விரும்பும் பெண்களினதும் பெண்களின் உரிமைகளுக்காக பணியாற்றும் பெண்கள் அமைப்புக்களின் கோரிக்கைகளாகும்.


சமத்துவ அரசியலுக்கான பெண்கள் குழு
குழு சார்பாக மேலதிக தொடர்புகளுக்கு ,
இல.4/1, தோமஸ் ஒழுங்கை, மட்டக்களப்பு.
தொலைபேசி / 0652223297, 0652224657


## எனது வாகனம்

அன்று
வாழ்க்கை என்னும்
வீதியில்
குடும்பத்தைச் சுமக்கும்
வாகனம் நான்.
அப்பொழுது சாரதி
எனது கணவன்

இன்றோ
நான் ஒரு
ஓட்டோக்காரி
பிறர் கட்டளையின் கீழ்
எனது வாகனம் இல்லை
எனது கட்டளையின் கீழ்
எனது வாகனம்.



- ஓசாநிதி -

## கடனும் கண்ணீரும்

யுத்தகால பகுதியில் பெண்கள் உயிரை இழந்தனர். உடமையை இழந்தனர். வாழ்வை தொலைத்தனர். கணவன், மகனை இழந்த பெண்கள் நடைப்பிணமாகினர், காதலனை இழந்தவள் கதிகலங்கினாள், அதற்குள் "கிறிஸ்மேன்" யுத்தகால அரசியல் தந்திரவாதியாக வந்தான். இத்தனையையும் எதிர்கொண்ட பெண்கள் தூக்குப் போட்டுத் தொங்கவில்லை, நெருப்பில் எரியவில்லை, நஞ்சு குடிக்கவில்லை ஆற்றில் விழவில்லை.

தற்போதைய சூழலில் தூக்குக் கயிறுகள் , நெருப்புப் பந்தங்கள், நஞ்சுகள் அத்தனையும் நமக்குள் தற்கொலைத் தூதனாய் வந்து விட்டன. காரணம் "கடன்" என்ற காலன் கழுத்ததைப் பிடிப்பதாய்ச் சொல்கின்றனர்.

வீட்டுக்கு வீடு "பீரோ"வில் இருந்து "விறகு அடுப்பு"வரை கடனுக்கு கொடுபடுகிறது.

"கடன்பட்டார் நெஞ்சம்போல கலங்கி நின்றான் இலங்கை வேந்தன்" என இங்கு குறிப்பிட்ட இலங்கை வேந்தனின் மனநிலைக்கு உள்ளாகும் பெண்கள். கலங்கி தவித்து தற்கொலை செய்து கொள்வது தொடர்கிறது.

நெருப்பில் எரிந்தவன் உயிருக்கு போராடுவதைவிட, கடலில் மூழ்கி போராடுவதை விட ஆலகால விடத்தை உண்பதை விட கொடுமையானது இந்த கடன்படுவதென்பது திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்பது போல கடன்படும் ஒவ்வொரு பெண்களும் சுயமாக சிந்திக்க வேண்டும், செயல்பட வேண்டும், ஓரே சிந்தனையில் ஒன்று பட வேண்டும். அப்போதுதான் கடன் தொல்லைக்கு விடிவு கிடைக்கும்.

ரி. சிவபாக்கியம்
அக்கரைப்பற்று


சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
இல.4/1, தோமஸ் ஒழுங்கை, மட்டக்களப்பு.
தொலைபேசி / 0652223297, 0652224657
மின்னஞ்சல் : suriyaw@slt.lk


முகவரி :..............................................
..............................................
..............................................
..............................................

Issn No : 1391 - 6130



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org